உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-௧௩.] ராக்ஷஸ ௵ வைகாசி ௴ [பகுதி-௭.

Vol. XIII. May—June, 1915. No. 7.

ஜீவ்யசரிதைகள்.

நூல்களின் பலபாகுபாடுகளுள், 'ஜீவ்யசரிதை' ஒன்று. ஒரு பெரியோரது பிறப்பு, வளர்ப்பு, படிப்பு, செயல்கள், குணாதிசயம் இவைகளை விரிவாய் எடுத்துரைக்கும் நூல் ஜீவ்யசரிதையாகும். ஆங்கிலத்தில் இம்மாதிரி நூல்கள் பல உள. அவைகள் விரிவாக இருப்பதுடன் வசனநடையிலேயே அமைக்கப்பட்டுமிருக்கின்றன.

தமிழிலும் பெரியோர்கள்சரிதை எழுதப்படாமலில்லை. பெரிய புராணத்தில் நாயன்மார்களது அடிமைத்திறம் விளக்கப்பட்டிருக்கிறது. முற்காலத்துவேந்தர்கள், குறுநிலமன்னர்கள் முதலியோரது ஈகை, வீரம் இவைகளைப்புகழ்ந்து பல தனிப்பாடல்களும் பிரபந்தங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. முருகதாசசுவாமிகள்இயற்றிய புலவர்புராணம் என்னும்நூலும் ஜீவ்யசரிதை என்னும் பாகுபாட்டில் அடங்கியதாகவேகொள்ளவேண்டும். ஆனால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ள ஜீவ்யசரிதைகளுக்கும் இதுவரை தமிழில்வெளிவந்திருக்கும் ஜீவ்யசரிதைகளுக்கும் பலவித்தியாசங்கள் இருக்கின்றன.

ஒவ்வொருதேசத்திலும் பலதுறைகளிலும்புகழ்பெற்ற பெரியோர்கள்பலர் இருந்திருக்கிறார்கள். அவர்களதுஜீவ்யசரிதைகளைப்படிப்பதே அத்தேசத்தார்க்குத் தேசாபிமானம்பெருகுவதற்கு ஒரு சிறந்த துணைக்கருவியாக இருக்கிறது. அன்றியும் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்நாளைத் தமக்கும் தம்தேசத்திற்கும் மேன்மையுண்டாகும்படி நன்குகழிக்கவேண்டும் என்னும் உணர்வைப் பெரியோரதுசரிதைகள் பலப்படுத்துகின்றன. அவ்வுணர்வால், தம்வாழ்நாளை நன்குசெலுத்துவதற்கும் இவைகளே இன்றியமையாத உதவிபுரிகின்றன. அன்றியும்,

பிற்காலத்தில் ஒருநாட்டின்சரித்திரம் ஆராய்ந்து எழுதப்படும்போது அந்நாட்டில்வாழ்ந்தபெரியோரதுசரிதைகள் சரித்திரஆராய்ச்சிக்குப் பெரியதுணையாகின்றன.

தமிழில்நூல்களியற்றவேண்டுமென்ற சிறந்தஆசையுள்ள தமிழபிமானிகள்பலர் இக்காலத்திற் கட்டுக்கதைகளையே எழுதிவருகிறார்கள். அவைகளிற் கதாநாயகர்கள் நற்குணசீலர்கள் என்றும், அதனால் அக் கதைகளைப்படிப்பதிற் பலநீதிகளைத்தெரிந்துகொள்ளக்கூடும் என்றும் முகவுரைகள்தீட்டிக் கற்பனையிலன்றி உண்மையில்நிகழக்கூடாதசம்பவங்களைக்கற்பித்து நூற்றுக்கணக்காக "நாவல்" களை வெளியிட்டுவருகிறார்கள். நமதுநாட்டில்வசித்தவரும் வசிப்பவருமான பெரியோர்களது சரிதைகளை எழுதிவெளியிட்டால், கற்பனைக்கதைகளைக்காட்டிலும், அவைகள் தமிழருக்கும்தமிழ்மொழிக்கும் பலமடங்கு மேலானபயனை உதவுமென்பது, இதைப்பற்றிச் சற்று ஆராய்பவர் எவர்க்கும் இனிது விளங்கும்.

இக்காலத்திற் பலரும்படித்தறியக்கூடியது வசனநடையே. ஆதலால் ஜீவ்யசரிதைகள் வசனநடையிலேயே எழுதப்படவேண்டும். மேலும் ஒருவரதுவாழ்நாளில்நிகழ்ந்தவற்றை விரித்தெழுதுவதற்கு வசனநடையே ஏற்றதாகவும் இருக்கிறது. பெரியபுராணம்போன்ற நூல்களில் அற்புதங்கள்பல விரிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் அவைகளுக்குச் செய்யுள்நடை ஏற்றதாகும். ஒருவனதுசெயல் ஒன்றையே கூறும் தனிப்பாடல்களும் செய்யுள்நடையிலமைந்தது பொருத்தமுடைத்தே. இக்காலத்தில் விரிவாக எழுதவேண்டியசரிதைகளில் அற்புதங்களைவரைவது நினைக்கவுங்கூடாதது. ஆகவே, இக்காலத்திற் கற்றாரினும் சிலரேசெய்யுள்நடைநூல்களைப்படித்தறியக்கூடியவர்களாக இருப்பதுபற்றியும், இக்காலத்துச்சரித்திரங்கள் விரிவாக இருக்கவேண்டியதுபற்றியும், இந்நூல்களில் அற்புதங்களைவிடவேண்டியதுபற்றியும் ஜீவ்யசரிதைகள் வசனநடையிலேயே இயற்றப்படவேண்டியனவாயிருக்கின்றன.

மனிதர்கள் பலதுறைகளில் முயன்றுவருவதால் ஒருவருக்கு ஏதாவது ஒருவிஷயத்தில்மட்டுமே மேம்பாடு ஏற்படக்கூடும். சிலர் பல விஷயங்களில் மேம்பாடுபெறவுங்கூடும். முற்காலத்திற் பெரும்பான்மை

தெய்வபக்தியிற்சிறந்தவர்களைப்பற்றிமட்டுமே நூல்கள் இயற்றப்பட்டிருக்கின்றன. இது ஒருகுறையே. தமிழ்நாட்டிற் சிறந்தபோர்வீரர்களும், இராஜ்யதந்திரிகளும், கொடையாளிகளும் அநேகர் இருந்திருந்தும் அவர்களைப்பற்றி நமக்கு ஒன்றுந்தெரியாமலிருக்கிறது. சிலகாலத்திற்குமுன் நமதுநாட்டிலிருந்த உயர்ந்தகொடையாளியான பச்சையப்ப முதலியாரைப்பற்றிக்கூட நாம் விவரமாய்த்தெரிந்துகொள்ளமார்க்கமில்லை. இக்குறையை இனியாவதுநீக்கிப் பலதுறைகளிலும் மேன்மையெய்தும் பெரியோரதுசரித்திரங்களை எழுதி, இக்காலத்தவரும் பிற்காலத்தவரும் பெரியோர்களதுநடத்தையைக்கைப்பற்றத்துணைபுரிவது தமிழர்களதுகடன்.

சிலர் இதற்கு ஆக்ஷேபிக்கக்கூடும். "நர கவனம்" "நரக் வனம்" என்னும் முதுமொழியைக்கவனியாமல் மனிதர்களைப்பற்றி எப்படி எழுதுவது என்று சங்கிக்கக்கூடும். கடவுளடியார்களைப்பற்றியெழுதுவது கடவுளைப்பற்றியெழுதுவதுபோலாதலால் அடியார்களைப்பற்றிமட்டும் எழுதலாமேயன்றி மற்றமானிடரைப்பற்றியெழுதுவது செய்யக்கூடாதகாரியமென்று சிலர் சொல்லக்கூடும். இதைச் சிறிது ஆராய்வோம். "எந்த இடத்தில் மேம்பாடுகாணப்பட்டாலும் அது என் தேஜஸ்ஸிலிருந்து உண்டாகிறது" என்று பகவானேதிருவாய்மலர்ந்தருளவில்லையா? போர்ச்சேவகனதுவீரத்திலும், புலவனதுசொல்நயத்திலும், கொடையாளியினது தன்னயம்மறந்த மனப்பான்மையிலும், இராஜ்யதந்திரியினது கூர்ந்தஅறிவிலும் இறைவனதுஆற்றல் விளங்கவில்லையா? அவைகளைப்புகழ்வது அவனதுதிருவிளையாடலைப்போற்றுவதல்லவா? ஒன்றுமட்டுங் கவனிக்கவேண்டியதுண்டு. ஒருவனிடம் கைம்மாறுகருதி அவனைப்புகழ்வதை முழுதும் ஒழிக்கவேண்டும். அப்படிக் கைம்மாறுகருதி ஒருவனைப்பற்றியெழுதுவது உண்மையான ஜீவ்ய சரிதையாகாது. முற்காலத்தில் வறுமையுற்றபுலவர்சிலர் தமது குறையைநீக்கக்கருதிச் சீமான்களைப்பாடியிருக்கிறார்கள். இது வறுமையின்கொடுமையால்நேர்ந்ததேயன்றி வேறல்ல. அவ்விதம்போற்றுவதைநோக்கியே "நர கவனம்" "நரக வனம்" என்றவசனமும் உபயோகிக்கப்பட்டது. அப்படியன்றிக் குணத்தை எடுத்துக்காட்டுவதையே கருத்திற்கொண்டு அக்குணம்பூண்டவரதுசரிதையையெழுதுவது தேசத்திற்கும் பாஷைக்கும் பயனுள்ளதே.

ஜீவ்யசரித்தகளை விரிவாகவே எழுதவேண்டும். பெரியாரொருவர் இவ்வித விசேஷச்செய்கைசெய்திருக்கிருரென்பதுமட்டுந்தெரிந்தால் அச்செய்கையின்மேன்மை நன்ருய் மனதிற்பதிவதில்லை. அவரது பிறப்பு, வளர்ப்புமுதலியவையெல்லாம் விரிவாயெழுதப்பட்டிருந்தால் அவரது சரித்திரத்தைப்படிப்பவர்க்குப் பற்றுதலுண்டாகி அவரது செய்கைகளின்சிறப்பும் படிப்பவர்மனதில் நன்குபதிகிறது. அவரைப் போல நாமும்நடக்க முயற்சிசெய்யவேண்டும் என்ற அவாவும் உண்டாகிறது. பிற்காலத்தவருக்கு அப்பெரியாரதுமேன்மைவிளங்குவதுமட்டு மன்றிச் சரித்திர ஆராய்ச்சிக்கும் உற்றதுணையாகிறது.

நூல்கள்மூலமாய்ப்பாராட்டத்தகுந்தபெரியார் இக்காலத்தில் யாராவது இருக்கிருர்களா என்று ஐயங்கொள்ளவேண்டியதில்லை. குறையொன்றுமில்லாதவர்மாத்திரமே பெரியோரென்றுகொள்வது தவறு. ஒருகுறையுமின்றியிருப்பது மானிடர்க்கு அரிது. ஒருவர் ஏதாவது ஒருதுறையிற்சிறப்புவாய்ந்தவராஞல் அவரைப்பாராட்டி அவர்சரித்திரத்தையெழுதுவது தகுந்ததே. இந்நாட்டில் இக்காலத்திலும் உயர்ந்த சர்க்கார் உத்தியோகஸ்தர்களும், தேசாபிமானிகளும், பண்டிதர்களும், கொடையாளிகளும் இருக்கிருர்கள். அவரதுசரித்திரங்களையெழுதுவது நல்லமுயற்சியாகும்.

ஆகவே, ஜீவ்யசரிதங்கள் எந்நாட்டிலும் எம்மொழியிலும் ஒரு முக்கிய இலக்கியப்பாகுபாடாதலாலும், தமிழில் இவை அதிகமாய் இதுவரை எழுதப்படாமலிருப்பதாலும், தமிழர் தமிழ்நாட்டுப்பெரியோர்களதுஜீவ்யசரிதங்களையெழுதுவது தமதுகடமையெனக்கொள்ள வேண்டும். அச்சரிதங்கள் வசனநடையில் விரிவாக எழுதப்படவேண்டும்.

ஜி. ஏ. சுந்தரமையர், பி.ஏ., பி.எல்.

நூலாசிரியர்சிஷ்டாசாரம்.

ஒருவர் நூலின்கண்ணேயுள்ளகொள்கைகளையும், அக்கொள்கைகளைக்கூறும்வசனங்களையும், மற்றொருவர் தமது நூலின்கண்ணே வேண்டுமிடந்தோறும் அநுவதித்துமொழிதல் மரபாம். அங்ஙனங் கூறும்போது நூலாசிரியர்பெயரையாயினும் நூற்பெயரையாயினும் கூறுதொழியார்.

ஓராசிரியர்கொள்கைகளை ஒருவர் அநுவதிக்கும்போது அவர் உரைத்தபடியே யுரைப்பர். மொழிகளை மாற்றியுங் கூட்டியுங் குறைத்து முரையார்.

"முன்னோர்மொழிபொருளேயன்றியவர்மொழியும்
பொன்னேபோற்போற்றுவம்............."

என்றார் நன்னூற்பாயிரமுடையாரும். இங்ஙனஞ்செய்தலே நூலாசிரியர்சிஷ்டாசாரமாம். ஓராசிரியர்கொள்கையையும் வாக்கையும் மற்றொருவர்கவர்ந்து தமது நூலகத்தேபுகுத்தித் தமதாகப்பாவித்தல் சோரப்புலமையாம். அங்ஙனமாகாதுகாக்குநோக்கமே நூலாசிரியர்க்கு இச்சிஷ்டாசாரம் வகுக்கப்பட்டதாம்.

இச்சிஷ்டாசாரம் தமிழ்நூலாசிரியரிடத்துமாத்திரமன்று, உலகத்தில் எப்பாஷைப்புலவரிடத்து முளதேயாம். அங்கிலேயநூலாசிரியர் பிறர்கொள்கைகளை எடுத்துக்கூறும்போது அவர்பெயர் நூற்பெயர்களையு முடன்கூறுவதோடமையாது முகமனுரையுங் கூறுவர். இங்ஙனங்கூறும்வழக்கம் செந்தமிழ்த்தொல்லாசிரியரிடத்தும் பெரிதாக வுண்டு.

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார் தாஞ்செய்தருளியநெஞ்சுவிடுதூதிலே,

"உன்னையொழியவுறவில்லையென்னுமது
தன்னையறிவைத்தனியறிவை—முன்னந்
தலைப்பட்டார்தீரத்துறந்தார்மயங்கி
வலைப்பட்டார்மற்றையவரென்னு—நிலைத்தமிழின்
றெய்வப்புலமைத்திருவள்ளுவருரைத்த
மெய்வைத்தசொல்லைவிரும்பாம—லைவர்க்கு
மாவதுவேசெய்தங்கவர்வழியைத்தப்பாமல்..........."

எனத் "தலைப்பட்டார்" என்னுந்திருக்குறளை எடுத்தாண்டருளிய இடத்து வள்ளுவருக்கும் அவர்வாக்கினுக்கும் சாத்திய சிறப்புமொழிகள் இங்கே நோக்கத்தக்கன.

மகா-ா-ா-ஸ்ரீ கே. ஜி. சேஷையரவர்கள் ஆநந்த௵ புரட்டாசி மாசத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையிலெழுதிய "மாணிக்கவாசகர்கால ஆராய்ச்சி"என்னும் அற்புதோத்தமவிஷயத்தைவாசித்துச்சென்றேன். அப்போது அவ்விஷயத்தில் எனதுகொள்கையும் எனதுவசனமுமாகிய சிலபகுதிகள் விரவியிருக்கக்கண்டேன். ஐயரவர்கள் அப்பகுதிகளைச் சென்னை ஸ்ரீமான் பி.இராமநாதனவர்கள்செய்த இருபதாநூற்றாண்டுத் தமிழ்ப்பெயரகராதியிலிருந் தெடுத்ததாகக்கூறி,அவற்றை அந்த இராமநாதனவர்கள்கருத்தென்றும் வாக்கென்றுங் கொண்டார்கள். அப்பகுதிகள்வருமாறு:—

"இவர்காலம் நாலாயிரம்வருஷங்களுக்குமுன்னுள்ளதென்பது நன்குதுணியப்படும் என்று சென்னை ஸ்ரீமான் பி. இராமநாதனவர்கள் தாமியற்றிய The 20th Century Tamil Dictionary என்ற அருமையான தமிழ்ப்பெயரகராதியில்வரைந்துள்ளார்"

"திருத்தொண்டத்தொகையினுள்ளே எடுத்தோதப்படாமையின் மாணிக்கவாசகர் சுந்தரமூர்த்திநாயனாருக்குப்பிற்பட்டவரெனச்சாதிப்பாருஞ் சிலருளர். அஃது தறியாமையின்பாலதாம். அகஸ்தியர், பதஞ்சலி, வியாக்கிரபாதர்முதலியோரெல்லாம் சிவபத்தியிலும் சிவயோகத்திலுஞ்சிறந்த மெய்யடியார்களாகவும், அவரையெல்லாம் திருத்தொண்டத்தொகையினுட்கூறாமை யாதுகாரணமோ, அதுவே மாணிக்கவாசகரைச்சேர்த்தோதாமைக்குங் காரணமாம்"

"கண்ணப்பர் சண்டீசர்களைத்துதிப்பவர் திருஞானசம்பந்தர் முதலியோரைத்துதிக்காமையாலும், 'சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்' என்னுந் திருவாசகத்திலே தேனித்தலென்னுஞ்சொல்வழக்கும், உவலை முதலிய அரியசொற்களும் பிற்காலத்துவழக்கன்மையாலும், திருவாசகம் தேவாரத்துக்குமுந்தியதென்பது நன்றாகத்துணியப்படும் என்று ஸ்ரீமான் இராமநாதன்கூறியதுங் கவனிக்கத்தக்கது"

மேலே இராமநாதனவர்கள்கூறியனவாகக்கொண்ட அநுவாதவசனங்களெல்லாம் யான் 1902-ல், அஃதாவது 13 வருஷங்களுக்கு

முன்னே, இயற்றிவெளியிட்ட அபிதானகோசத்தில் மாணிக்கவாசகர் என்னும்விஷயத்தில் என்னால்வரையப்பட்டனவாம். பொருளும் என்னுடையவை. வசனங்களுமென்னுடையனவே. அவை யான் பலநாள்வருந்தி ஆராய்ந்துகண்டபொருள். ஸ்வயாபிப்பிராயம். இவ் விஷயத்தில் முன்னர் எவரும் எழுதாத அபிப்பிராயம்.

அங்ஙனமாகவும், சென்னை ஸ்ரீமான் பி. இராமநாதனவர்கள் தாமெழுதிய அகராதியில் இவற்றை இன்னார்வசனமென்றுகூறாது தமதுகூற்றாகப்பாவித்தது சிஷ்டாசாரமாகாதன்றோ. ஸ்ரீமான் சேஷையரவர்கள் தாமநுவதித்தமதங்களையும் வசனங்களையும் இன்னார் மதம் இன்னார்கூற்றென வியக்தமாகக்கூறிப்போயினரன்றோ. அது வன்றோ சிஷ்டாசாரம்.

சிஷ்டாசார மிதுவென்றுகாட்டிச் சாமானியரையீடேற்றுதற் குரியராகிய ஸ்ரீமான் பி. இராமநாதனவர்கள் இவ்விஷயத்திற் சாமானி யரைப்போ விழுக்கியது அற்புதம்.

ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை,
நாவலர்கோட்டம், யாழ்ப்பாணம்.

ஸ்ரீ:

சுந்தரகாண்டம். (கம்பர்)

"செந்தமிழ்" (தொகுதி-௧௩-பகுதி ௪-ல்) ௧௪௮-ஆம்பக்கத்தொடர்ச்சி.

இனிவரும் இரண்டுசெய்யுள்களால் உத்தமமானதத்துவத்தையும், வேதாந்தக்குறிப்பையும், மங்களாசாசனமகிமையையும், விசேஷமாக எடுத்துச்சொல்லுகிறார்.

"மும்மையாமுலகந்தந்தமுதல்வற்குமுதல்வன்றாதாய்ச்
செம்மையாலுயிர்தந்தாய்க்குச்செயலென்னாலெளியதுண்டே
அம்மையாயத்தனுயவப்பனேயருளின்வாழ்வே
இம்மையேமறுமைதானுநல்கினையிசையொடென்றான்"

மும்மையாமுலகந்தந்த—பதினான்குலகத்தையும், கிருதகம், அகிரு தகம், கிருதாகிருதகம் என்று மூன்றுவகையாகப்பிரித்தபடி எல்லா உலகங்களையும் சிருஷ்டித்த; முதல்வற்கு—சிருஷ்டியால் முதல்வனாகிய

பிரமனுக்கு; முதல்வன்—“ முதலாவார்மூவரம்மூவருள்ளும், முதலாவான்மூரிநீர்வண்ணன் ” என்னும்படி பரமகாரணபூதனை சாக்ஷாத்பரமாத்மாவினுடைய; தூதாய்—அஜ்ஞானமடைந்தசேதனர்களை உஜ்ஜீவிக்கச்செய்யவேண்டியதற்காகப் பரிபூர்ணகிருபைபெற்ற ஒரு ஆசாரியனாய்; செம்மையால்—நேரானவழியான சரணாகதிதருமத்தின்முறைப்படி; உயிர்தந்தாய்க்கு—என்னை ஈடேற்றி உய்யச்செய்த பரமஉபகாரியும் பரமகிருபாளுவுமாகியவுனக்கு; செயல் என்னாலெளியதுண்டே—நீசெய்தபேருதவிக்கு நான் செய்யக்கடவகைம்மாறு யாதொன்றுமில்லையே, அதாவது ஞானவுதயமானபின்பு ‘நான்’‘எனது’ என்பது இல்லையாதலின் தன்னுடையபாரதந்திரியந்துலங்க இவ்வாறு சேதனன்சொல்லலுற்றான் என்பதாம். அம்மையாய்—பிரியபரையாகிய மாதாவைப்போலும்; அத்தனாய—ஹிதபரனாகியபிதாவைப்போலும்; அப்பனே-அநுக்கிரகஞ்செய்தஆசாரியஸ்வரூபனே! அருளின்வாழ்வே-கிருபைக்கிருப்பிடமாயுள்ளவனே! இம்மையேமறுமைதானும் இசையொடுநல்கினை—த்வயானுபவத்தைக்கொடுத்தருளினாய், அதன்மூலம் புகழையும் புண்ணியத்தையும் கட்டிக்கொண்டாய்; என்றாள்—என்று சேதனன் ஸ்தோத்திரஞ்செய்தான். (தவிரவும்,)

“பாழியபணைத்தோள்வீரதுணையிலேன்பரிவுதீர்த்த
வாழியர்வள்ளலேயான்மறுவிலாமனத்தேனென்னின்
ஊழியோர்பகலாயோதும்யாண்டெலாமுலகமேழும்
ஏழும்வீவுற்றஞான்றுமின்றெனவிருத்தியென்றாள்”

பாழியபணைத்தோள்வீர—“மாணியாம்வேடந்தாங்கிமலரயற்கறிவுமாண்டோர், ஆணியாயுலகுக்கெல்லாமறம்பொருணிறப்புமண்ணல்” என்றபடி பகவத்பாகவதகைங்கர்யசாதனமானபாகுபலமுடையவனே! துணையிலேன்பரிவுதீர்த்த—யாதொரு ஆதாரமுமின்றிக் கடைத்தேறும் வழியற்றுக் கலங்கிக்கிடந்த அடியேனுடையதுக்கத்தையும் அஜ்ஞானத்தையும்நிவர்த்தித்த; வாழியர்வள்ளலே—நித்தியமங்களமானவாழ்வை அன்புடனும் ஆதரவுடனும் அளித்த கருணைக்கடலே! யான்மறுவிலா மனத்தேனென்னின்—நான்பெற்ற உபதேசானந்தரம் நிச்சயஞானம் பூண்டுஅநுக்கிரகம்பெற்று நல்வழிப்பட்டேனாதலால்; ஊழியோர் பகலாயோதும்யாண்டெலாமுலகமேழும் ஏழும்வீவுற்றஞான்று மின்றெனவிருத்தியென்றாள்—நீ பல்லாண்டுபல்லாண்டாய்நீடூழிகாலம் நிலை

பெற்று என்போன்ற இன்னும் அநேகசேதனர்களையும் உயிர்ப்பிக்க வேண்டும் என்றுசொல்லிச் சேதனன் அதிகவினயத்துடன் மங்களா சாசனம்செய்கிறான் என்றபடி,

ஆகவே இந்த இரண்டுசெய்யுள்களுக்கும், பிராட்டி பகவானை ஸ்தோத்திரஞ்செய்து பின்னர் நீ சிரஞ்சீவியாய்வாழக்கடவாய் என்று அநுமானை ஆசீர்வதித்தாள் என்றது சாமானியக்கருத்தாயினும், வேதாந்தபரமாக, இந்த சேதனன் தன்னுடைய கிருதக்ஞதையை வெளிப்படுத்தித்தான்ஆசாரியனுக்குச்செய்யும் கைம்மாறியாதொன்று மில்லையேயென்று மனம்நொந்து தன்னாற்செய்யக்கூடிய "பல்லாண்டு பல்லாண்டு" "இன்னமொருநூற்றாண்டிரும்" என்று பலவிதமாய்ச் சொல்லி மங்களாசாசனம்செய்கிறான் என்பதும் பொருந்தும்..

ஆதியிலெடுத்துக்கொண்டபடி சேதனனுடையநிலை ஆசாரியதர் மம் இவ்விரண்டுவிஷயங்களுக்கிணங்க உருக்காட்டுபடலம் அறுபத்து மூன்றாவது'மீட்டுமுரை' என்ற செய்யுள்முதல் எழுபத்திரண்டாவது 'பாழியபணைத்தோள்' என்ற செய்யுள்ஈறாக பத்துப்பாசுரங்களாலுந் தோன்றும் கருத்துக்களைஆராய்ந்து என் சிற்றறிவுக்குப்புலப்படும்மட் டில் இதுகாறும் எடுத்தெழுதினேன். இவ்வளவில் இப்போதைக்கு இது முடிவுபெறும். இதுவரை இதைப்பற்றியெழுதியதன் முக்கியநோக்கம் இந்தவிஷயத்தைக்குறித்துப் பண்டிதர்களிற்பலர் ஆராய்ச்சிசெய்து விவரித்து நன்குவிளக்கல்வேண்டுமென்பதும், இதுபோல இன்னும் மற்றும்செய்யுள்களும் வேதாந்தஸாரத்தைஉள்ளடக்கிக்கொண்டு ஆங் காங்கேதோன்றுமாயின் அவைகளையும் பண்டிதர்கள் ஆராய்ச்சிசெய்து வெளிப்படுத்தவேண்டுமென்பதுமேயாம். இதுபற்றியே இப்பெரிய விஷயத்தைக்குறித்து எனக்குத்தோன்றியமட்டில் எழுதத்துணிந்ததே யன்றி வேறில்லை.

எம். எஸ். சேஷையங்கார்.

ஸ்ரீ:

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும் வருஷோத்ஸவ மங்களவாழ்த்து.

இது கா. ஸ்ரீ. கோபாலாசாரியரியற்றியது.

கலிவெண்பா.

பூமேவுகூடலின்முன்பூத்ததமிழ்ச்சங்கமெனு
மாமேவுபொய்கையின்வாய்வண்புலவ—ராமேவு
வண்டுகண்மொய்த்துண்டுமகிழுத்தமிழ்மணந்தான்
எண்டிசையுஞ்சென்றுயிர்கட்கின்புசெய—எண்டகுதென்
பாற்கரைசெய்யாததமிழ்ப்பார்க்கரசாமிக்கபுகழ்ப்
பாற்கரசாமிப்பேர்ப்பகலவனால்—நூற்கலையாம்
வண்போதொர்போதுமலர்ந்தந்தமார்த்தாண்டன்
விண்போய்மறைந்தெனப்பின்விற்பனர்சொல்—பண்பாரும்
பாண்டித்துரையாம்பரிதியினுனின்றிலகிற்
றீண்டவனும்போகவிவண்பின்னே—வேண்டுகுணம்
மூண்டகலைச்சுப்பிரமணியமுன்னோன்சேர்ந்
தீண்டொருநாணின்றேகவிப்போது—மாண்டிடுமோ
என்றெவருமுள்கலங்கியேங்கியபோதிப்பார்மீ
தின்றெழுந்ததேயோரிளங்கதிர்தான்—நன்றுலகில்
நாளுஞ்சீராவிந்தினத்தடமிலக
நீளுந்தன்வண்கரங்கணேர்செலுத்தி—யாளு
மெனவேயுதித்தவினனேபுலவர்
தனமேதனத்தினருஞ்சார்வே—புனன்மேவு
தேசனேதென்செந்தினகரனேசெய்யவட்கு
நேசனேகல்விநிலயமே—தேசுமிகுந்
தாடுஞ்சபையோரகமலர்மேனின்றுவிளை
யாடுஞ்சரசகுணவன்னமே—நீடொளிசெய்
கற்பகமேலோராங்களிவண்டுசேருமவைக்
கற்பகமேலோங்குமின்பக்கனியே—பற்பலர்க்கு
வேண்டுபயனெல்லாம்விரும்பிமுகமலர்ந்து
தேண்டிவழங்குங்காமதேனுவே—நீண்டபுகழ்ப்

பாடகர்க்கும்பாவலர்க்கும்பண் ணுபரிசினிலம்
பாடகற்றுஞ்சீர்க்கற்பகதருவே—நீடுலகிற்
கல்லாருங்கல்விமிகவல்லாருஞ்செல்வருமஃ
தில்லாரும்போற்றுமெழின்மணியே—சொல்லாருங்
கண்டமிழ்தம்பாகுகனிமுதலகைப்பிக்குந்
தண்டமிழ்க்குவந்திடுசிந்தாமணியே—தெண்டிரைசூழ்
பார்விலைகொண்மாமணியேபாற்கரன்றன்கண்மணியே
சீர்மகுடவேந்தர்சிகாமணியே—ஓர்மலைமேற்
சங்கரனுர்தங்கிநிலந்தாங்குதல்போலோர்முனிவன்
தங்கியிந்தப்பூவைச்சமன்செய்யப்—பொங்கியெழு
சந்தனமுந்தென்றலுநற்றண்டமிழுந்தான்பிறந்து
வந்துகமழ்மாமலயமாமலையும்—தந்தமுரை
வேறுகாச்சேதுமன்னர்மெய்யொழுக்கநீர்மையுடன்
மாறுவொழுக்கின்வையைமாநதியும்—காறுவுங்
கற்பகமுஞ்சொற்கவியுங்காண்டற்கொன்றேயுடைத்தாய்
முற்பகைசெய்தேவாமுதமொன்றே—இற்படைத்திட்
டவாருங்கொள்வாருமில்லாதநாடென்னும்
ஓவாவசையினும்பருள்ளொளித்த—ஆவாவப்
பொன்னுடுபோலாதுபொன்னுடுதண்டலைசூழ்ந்
தெந்நாடுங்காணவியைபுடைத்தாய்—முன்னுடு
கற்பகங்கணற்கவிகள்காணக்கணக்கின்றி
நற்புலவரேனையவர்நட்பமரச்—சொற்சுவைசேர்
முத்தமிழாமின்னமுதமூன்றுங்கொண்டேபலர்க்கும்
எத்தகையவாம்பொருளுமீவதாய்—இத்தரைமேல்
எல்லாருஞ்சேருமிசையுடனேயெல்லாரு
நல்லார்தமிழ்ச்சேதுநன்னுடும்—பல்லார்சொல்
கல்வியறஞ்செல்வமுயர்கைத்தொழில்பல்வர்த்தகமும்
புல்லுமெழின்முகவைப்பொன்னகரும்—எல்லையில்சூழ்
அட்டதிக்கில்வட்டமிட்டரட்டர்மற்றலைக்குரத்தை
எட்டிவைக்கும்வெற்றியிவ்வுளியும்—எட்டாகும்

வாரணமுமொப்பின்றிவையமிசைநடக்குங்
காரெனவேதற்காங்கடகளிறும்—பேரணங்கார்

கண்ணளியுந்தாதார்கடிமலரையூதுமிசைப்
பண்ணளியுமொய்க்குமுல்லைப்பைந்தாரும்—எண்ணுமுயர்

வென்றிகொடைநீதிமெய்விளக்கமூன்றாக
முன்றின்முழங்குமுரசமும்—நன்றாகக்

கல்லார்க்குங்கல்விமிகவல்லார்க்குமற்றுமுள
எல்லார்க்கும்புக்கிலிவனென்றே—சொல்லேறி

நாடியுயர்ந்தெவர்க்குநல்வரவுகாட்டியழைத்
தாடுகவணவணிகொடியும்—ஓடுநீர்

வெள்ளமும்புள்ளும்விலங்கும்விலைமகளி
ருள்ளமுமோர்பாலொழுகிவரத்—தெள்ளுதிரை

மிக்குலாந்தண்கடல்சூழ்மேதினியெல்லாமளந்து
திக்கெலாஞ்சென்றளக்குஞ்செங்கோலும்—தொக்கொளிசேர்

வேற்படையும்வாட்படையும்விற்படையுநாற்பகுதி
மாற்படையுமுண்டெனினுமன்னுலகை—மேற்படர்சீர்த்

தன்பெயராற்றண்ணளியாற்றாழாநிலையினால்
வன்பகையைமாற்றியிந்தவையகத்தில்—இன்புறவே

வானம்மழைவழங்கமண்ணும்வளஞ்சுரக்கத்
தானந்தழைக்கத்தவம்வளர—வானுறுசீர்க்

கற்பமருமாதுகலக்கஞ்சிறிதுமின்றிப்
பற்பலர்கூட்டத்துப்படரவும்—மெய்ப்படைக்கைக்

கொள்ளுமொருபையுளும்வன்கோளரக்கனைச்சீறி
எள்ளிவெற்றியோடேயெதிர்க்கவும்—வெள்ளவுடைப்

பூமகளைநாமகளைப்பூமகளைப்பூதரத்து
மாமகளைக்கையிடத்துவாயிடத்து—மாமுகத்

துள்ளங்கொடுபூவுணர்வாக்கந்தண்ணருளைக்
கொள்ளப்பலர்க்குங்கொடுத்துவக்கும்—வள்ளால்

இரண்யகெர்ப்பயாஜியிரவிகுலமுத்து
வரவிஜயமன்னவர்தம்மன்ன—இருசெவியுங்

கேட்டதுண்டுநின்குணங்கள்கேளிர்சொலக்கண்ணிரண்டும்
வேட்டதுண்டுகாணநினைமேதக்கோய்—நாட்டினனற்
கல்வியறிவொழுக்கங்கற்றுரையாதரித்தல்
சொல்வளன்மெய்யாதிசுபகுணங்கள்—மல்கியசீர்
நல்லார்தங்நட்பைநயப்பரறிவுடையார்
கல்லாரவர்தங்கனமறிய—வல்லாரோ
பொன்னின்பெருமைதனைப்பொன்வினைஞரேயறிவர்
இன்னிசையைவல்லோர்களேயறிவர்—இன்னுங்கேள்
"நற்றாமரைக்கயத்தினல்லன்னஞ்சேர்ந்தாற்போற்
கற்றுரைக்கற்றுரேகாமுறுவர்"—மற்றும்
"அறனறிந்துமூத்தவறிவுடையார்கேண்மை
திறனறிந்துதேர்ந்துகொளல்"மேல்—அறவேவந்
"துற்றநோய்நீக்கியுறாஅமைமுற்காக்கும்
பெற்றியார்ப்பேணிக்கொளல்"பின்னும்—பற்றுதற்குச்
"செய்த்தானுஞ்சென்றுகொளல்வேண்டுஞ்செய்வினைக்கும்
வாய்க்காலனையார்தொடர்"பென்று—வாய்ப்பாகக்
கூறியவான்றோர்வாய்மைக்கோதற்றநற்பொருளைத்
தேறிநின்சேர்க்கைத்திறன்வேண்டி—வீறுபுகழ்ப்
பானுவரப்பார்த்துநிற்கும்பங்கயமுந்தண்ணிலவின்
பான்மதிநோக்குங்குமுதப்பைம்போதும்—வானின்வரு
பைம்புயலைநாடும்பயிரும்படர்வதற்கோர்
கொம்புதனைவேண்டுங்கொடியுமிகும்—அன்புகொளும்
அன்றில்வரப்பார்க்குமணிபெடையுமெல்லியதண்
தென்றல்வரநிற்குநல்லதேமாவும்—நன்றளிக்குந்
தாதாவைநோக்குந்தரித்திரருந்தாங்குநல்ல
மாதாவைநோக்குமகவும்போல்—நீதிசெய்நின்
ஆதரவைநாடியருந்தமிழின்சங்கமிது
'நீதயையாயுன்கைநிழலிலெனைப்—பாதுகா'
என்றேநின்றன்கணெதிர்நின்றுவேண்டலுநன்
றென்றேதலைமையைநீயேற்றிதனை—நன்றாகப்

பாவலரைநாவலரைப்பைந்தமிழின்வாழ்வினின்மிக்
காவலரையாய்ந்தேயழைப்பித்துப்—பூவலயத்
தோங்குமுகவையிற்கோலோச்சுபுகழ்மன்னரெலாந்
தாங்கிவந்தசெய்திதளராமே—வீங்குகலை
வல்லாரைக்கொண்டுவளநூற்பணிபூட்டி
எல்லாருஞ்சிந்தைமகிழ்ந்தேதத்தெடுப்பச்—சொல்லுதமி
ழாகுமணங்கினருமைபெருமையெலாம்
நீகையுறுகனிபோனேர்காட்டி—ஓகையுடன்
சீராட்டியெல்லாச்சிறப்புமிகவேநன்று
பாராட்டுவாய்தமிழின்பாலகா—போராட்டி
வல்லரக்கர்ச்செற்றுலகைவாழ்வித்தவில்லியந்த
நல்லகொற்றச்சீராமநாதனைமுன்—சொல்லெடுத்துத்
"தென்சொற்கடந்தான்" எனவுரைத்ததெய்வகவி
தன்சொற்கிணங்கத்தகுபுலமை—பின்சொல்
இராமநாதப்பெயரினேந்தலைக்கொண்டிந்நாள்
இராமநாதப்புரியில்யாங்கள்—பராவவரு
போதமுத்துராமலிங்கபூபாலாபோற்றுநர்தந்
தீதவித்தசேதுபதிச்செம்மலே—ஓதுமெய்ச்சீர்த்
தென்மதுரையேயிந்தச்செந்தமிழின்சங்கத்தைத்
தன்மதுரையேநீதனிநடத்து—நன்முறையை
என்னென்றுரைப்போமிராஜராஜேசுரனே
மன்னும்புவிமேன்மனவலியும்—பின்னுநல
சொல்வலியுமெய்வலியுந்தூயவறிவின்வலியும்
பல்வகையதாகும்படைவலியுஞ்—செல்வச்
சனவலியுங்கல்வித்துணைவலியுஞ்சான்றோ
ரினவலியுஞ்செல்வத்தினின்பக்—கனவலியும்
நன்மனைவிமக்கண்முதனன்மைக்கடுத்தவற்றோ
டிம்மைக்கணுயுள்வலியெல்லாமேய்ந்—தெம்மையுமெந்
தாய்மொழியாஞ்செம்மைத்தமிழ்மொழியையுங்காத்து
நீயுலகின்மேன்மேனன்னேர்மையொடும்—நேயமொடும்
தண்மதியுமொண்கதிருந்தாமுளநாள்வண்மையொடு
மண்மிசையேவாழ்கமகிழ்ந்து.

கா. ஸ்ரீ-கோபாலாசாரியர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

பதின்மூன்ரும் வருஷோத்சவமங்கலவாழ்த்து.

இது

சேதுசமஸ்தானம் மஹாராஜாஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

வி. திருஞானசம்பந்தம்பிள்ளையியற்றியது.

கலிவெண்பா.

பூவாருந்தேவைப்புராதனமாம்பேர்படைத்த
மாவாருந்தென்முகவைமாநகரிற்—றேவாதி
தேவனெனுஞ்சிராமநாதன்றிருவருள்சேர்
காவலனென்ருேங்கிவருங்கற்பகமே—பூவலயந்
தாங்கியறங்காத்தருளத்தாசரதியேமீண்டும்
ஈங்குவந்தானென்னஇயல்கெழுமிப்—பாங்குபெற
ஈத்துவந்துமீசன்இறைவன்மலர்ச்சரணம்
தோத்திரித்தும்பாத்தொடுத்துந்தொண்டுபுரிந்—தேத்துபல
மூர்த்திக்களவில்முழுமணிப்பூண்பூட்டிவைத்தும்
கீர்த்திக்கன்றன்பிற்கிராமமிட்டும்—பூர்த்திபெற
மெய்வைத்தபூதிமணிமேன்மறையாமைந்தெழுத்தும்
உய்வைத்தருமீண்டுயிர்க்கெனவே—குய்வைத்த
சீருருந்தெய்வச்சிவத்தலங்களாயொளிரும்
ஆரூர்முதற்றலங்களார்வமுடன்—நேரூரச்
சென்றுபுவிமுழுதுஞ்சேமமுறநாமகிமை
நன்றுசுவைசெவிக்குநல்கவே—கன்றுகளுக்
காவளிக்குந்தீம்பாலெனவேயமுதுண்டு
தூவளிக்குந்தோணிபுரந்தோன்றவருங்—கோவளிக்கும்
தேவாரமாதியபன்னூலுட்டெளிபொருளை
நாவாரஇன்பால்நயந்தோதி—ஓவாப்

பிரசங்கமாரிமிகப்பெய்துவந்தகொண்டல்
பரசங்கைநாதற்கும்பானேர்—கரசங்க

மாதவற்குமாதருடன்மாமயிலின்மன்னிவரு
நாதனுக்குங்கோயில்நலமுறவே—நாதமிக்க

கும்பாபிஷேகமொருகோடிக்குமேற்புரிந்த
நம்பானுகோத்திரத்தின்நாயகனும்—முன்பார்ந்த

பாற்கரவேள்பெற்றெடுத்தபண்பதனுற்கன்னனிலும்
மேற்கருதுந்தூயவிதரணனே—நாற்கவியுந்

தெள்ளிமணமீதென்றுதேவரெலாங்கொண்டாடும்
வள்ளிமணமாலைசெய்தவள்ளலெனும்—அள்ளிலைவேற்

றீரன்முத்துராமலிங்கசேதுபதிதன்புனிதப்
பேரனெனவந்தபுகழ்ப்பெம்மானே—காரணனும்

பாண்டித்துரைக்கிளையான்பானுதித்துத்தம்பியெனப்
பாண்டித்துரையாகும்பண்பினனே—யீண்டித்

தலத்திலுடன்கொண்டுமகிழ்தாங்கியுலகாளும்
நலத்துரையேசேதுநாதா—சொலத்தகுசீர்

வள்ளுவர்நூலுந்தருக்கசங்கிரகமாநூலும்
தெள்ளுபலநூலுமச்சிற்சேர்த்திசையைக்—கொள்ளைகொண்ட

மால்பொன்னுச்சாமிவரோதயற்கும்பேரனென
நூல்பன்னவந்துதித்தநுண்ணறிவோய்—சேல்பன்னு

கண்ணுடையமாதர்மனக்காதற்கிலக்கியமே
பண்ணுடையகீதப்பனுவலுக்காம்—எண்ணுடைய

போதத்திலக்கணமேபுண்ணியத்திற்கண்ணிடமே
கோதற்றபத்திக்குணக்கடலே—வேதத்தில்

விற்பனர்கள்தங்கள்விழைவொடுங்கத்தந்தவர்பால்
அற்பகலாவண்மைபுரியாண்டகாய்—பொற்ப

இமத்தானவிண்டுவரையேய்ந்தவியற்கல்விச்
சமர்த்தானராகவனைத்தன்சீர்ச்—சமஸ்த்தான

பண்டிதனுக்கொண்டியல்சேர்பாவலனுமன்னியென்றும்
தண்டமிழ்ப்பாவாணர்தமைப்புரந்து—கொண்டுவரும்

சீமானேயென்னைத்தெருட்டிபிவணெய்தவைத்த
கோமானேஞானக்குரிசிலே—பாமாண்பார்

பாண்டித்துரைகள்பரிபாலித்தசங்கத்தைப்
பாண்டித்துரைபின்னும்பாலிக்க—வேண்டிநின்சீர்த்

தந்தையருள்கொண்டினிதேதாங்கிவந்தவிச்சங்கம்
எந்தைநீயாதரிக்கவெண்ணியே—முந்துசிவ

காமிநாதற்குமறைகாதினுபதேசித்த
சாமிநாதற்குநிகர்தத்துவந்தேர்—நேமியாம்

சாமிநாதப்புனிதன்சாற்றியவாறேயறிஞர்
சாமியானந்தசமை*யிதனிற்—றேமில்குணப்

பேதையேழாண்டாம்பெதும்பைபதினொன்றாம்
மூதுலகின்மங்கைபதின்மூன்றுவய—தாதலினால்

மங்கைப்பருவமடைந்ததமிழ்மாதுதனைத்
திங்கட்சடிலன்றிருவருளால்—மங்களமாக்

கைக்கொண்டவட்கினியகாதற்றலைவனாப்
மெய்க்கொண்டபல்கலைஞர்மேவியொளிர்—இக்கவினார்

மாராமலிங்கவிலாஸமெனும்மண்டபத்தே
ஊரார்பலருமகிழுற்சவந்தான்—பேராருந்

தென்னிலங்கைப்புண்ணியனும்ஸ்ரீராமநாதன்முனம்
இந்நிலையேகொண்டாடிபின்புற்றாய்—பன்னருஞ்சீர்க்

கம்பனுறழ்சாமிநாதக்கலைஞன்முதல்
உம்பரினும்மேலாவுயர்புலவர்—பம்பியுள

இச்சங்கந்தன்னைஇனிதுறச்செய்தாண்டகையே
அச்சங்கடிகளவும்அண்டாமே—மெச்சணிசேர்

செய்புட்குழுவியெலாஞ்சேமமுறப்பெற்றெடுத்து
மெய்பிற்றழுவிவிளங்கிமிகத்—துய்யவா

மாலாம்வடதிசைக்குமன்னன்குபேரனது
மேலாங்குலத்தின்மிளிர்ந்துதித்தோன்—பாலேயும்

* சமை - வருடம்.

முத்தாய்ச்சியார்தம்முறுவலெனுஞ்சீதரனேர்
பெத்தாச்சியென்றபுகழ்பெற்றானை—அத்தாவண்
சேதுபதிநின்சங்கத்திற்கோருபாக்ராச
ஞாதிபதியாக்கொண்டனையிறையே—போதமதின்
வாரிநிகர்சீனிவாசர்இருவோரைக்
காரியதர்சியராக்கைக்கொண்டாய்—வாரிதிசூழ்
பூமண்டலமுழுதும்போற்றுபுகழ்ச்சேதுவையாள்
மாமண்டலேசுவரமன்னவனீ—ஆமதனால்
மாதேவதேவன்றன்வாமத்தினிதிருக்கும்
மாதேவிவாமிபரைவாணியொடு—பூதேவி
சீதேவிபோற்றுஞ்சிவையருளால்வாழ்வுறவிப்
போதேபோலென்றும்புகழ்பெருகத்—தாதேவும்
முல்லையெனுந்தண்டார்முருகுபிர்க்குந்திண்புயத்தாய்
கல்லையொருபெண்ணாக்குங்காலுடையோய்—நல்லபல
செல்வம்படைத்தெங்கள்ஸ்ரீராஜராஜனெனும்
செல்வனேநீமேழிசெந்தமிழைப்—பல்வகையுஞ்
சுந்தரமேமன்னிச்சுபம்படைக்கக்காத்தருளி
இந்திரன்போல்வாழ்கஇனிது.

சுபம்.

பண்டிட். வி. திருஞானசம்பந்தம்.

ஸ்ரீ

மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்களித்த நன்கொடை.

இச்சங்கத்தின் பதினொன்காம்வருடத்திய அறிக்கைப்பத்திரத்திற் கண்டபடி, சங்கத்தின் முதலுக்காகவும், கட்டிடம்கட்டுவதற்காகவும் பொருளுதவிசெய்துள்ளகனவான்கள் இருபத்தெண்மரில் ரூ. 100க்குக் குறைவாகப்பொருளுதவிசெய்திருக்கிற இருவர்தவிர ஏனைய இருபத்தாறுகனவான்களையும், சங்கத்தின் சாசுவத அங்கத்தினராகச்சேர்த்திருக்கிறது. ஷெயார்களிடமிருந்து வசூலானதும் வசூலாகவேண்டியதும் சேர்ந்து மொத்தம் கூடுதலாகியுள்ளதொகை ரூ. 28,275.

இவ்வருடத்தில் இதுவரையிலும், ஷெ காரியத்திற்காக அன்புடனே பொருளுதவிசெய்தும் வாக்களித்துமுள்ள கனவான்களின் பெயர்முதலியன அடியில் விவரித்திருக்கிறது. அவர்களின் சங்காபிமானமும், தமிழபிவிருத்தியிலுள்ள ஊக்கமும், சிரத்தையும், அவர்கள் அன்பும் பெரிதும் பாராட்டற்பாலன. அவர்களுக்கு இச்சங்கத்தார் மிக்கநன்றிபாராட்டுகிறார்கள். இதுபோலவே தமிழபிமானச்செல்வர்கள் அநேகர் முன்வந்து உதவிபுரிவார்களென்றே உறுதியாக நம்புகிறோம்.

இவ்வருடத்தில் பொருளுதவிசெய்தும் வாக்களித்துமுள்ள கனவான்களின் பெயர்முதலியன.

---

1. மகா-ா-ா-ஸ்ரீ சித. முரு. முருகப்பசெட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ. 250
2. ,, அள. சித. லெ. இராமசாமிசெட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ. 350

3. மகா-௱-௱-ஸ்ரீ அப்பு. லெ. ராம. லக்ஷ்மணன்செட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ. 150

4. ,, சே. வு. ராம. அரு. இராமநாதன்செட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ. 200

5. ,, லெ. அரு. லெ. இராமநாதன்செட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ. 100

(இவர் இதற்குமுன் வாக்களித்துள்ள தொகை ... ரூ. 100)

6. ,, அள. வீர. பெ. வீரப்பசெட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ. 350

7. ,, அள. வீர. சித. லட்சுமணன்செட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ. 200

8. ,, பள. செ. லட்சுமணன்செட்டியாரவர்கள், தேவகோட்டை ... ரூ. 200

9. ,, பூலாங்குறிச்சி, R. M. P. V. பழநியப்பசெட்டியாரவர்கள் ... ரூ. 1000

10. ,, T. N. சுந்தரராஜ ஐயங்காரவர்கள், B. A., B. L., ஹைகோர்ட்டுவக்கீல், மதுரை. (சங்கம் கௌரவ யதரிசி). ... ரூ. 250

ஆகமொத்தம் ரூ. 3,050

T. C. Srinivasa Aiyengar,

T. N. Sundararaja Aiyengar,

காரியதரிசிகள்,

12—7—15.

மதுரைத்தமிழ்ச்சங்கம்.

இச்சங்கத்தார் ஆனந்த ஹு பங்குனிமீ 23, 24, 25. (1915-ஹு ஏப்பிரல்மீ 5, 6, 7)-ம் தேதிகளில் நடாத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப்பரிசும், யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

—:(o):—

பண்டிதபரீக்ஷை.

ஜொடசிரிஜிஸ்ட
ச்சிசிர், ர்சிர்,

II வது வகுப்பு.

1. 1. சு. ஹரிஹரையர், உபாத்தியாயர், மதுரைத்தமிழ்ச்சங்கக் [கலாசாலை, மதுரை.

2. 2. சத்தியவாகீசுவரையர், தமிழ்ப்பண்டிதர், தமிழ்லெக்ஸி [கன் ஆபீஸ், ஸெனட்ஹௌஸ், சென்னை.

பிரவேச பண்டித பரீக்ஷை

I வது வகுப்பு.

1. 10. ரெ. இராமையங்கார், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை. (முதற்பரிசு ரூ. 50 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

II வது வகுப்பு.

1. 11. மு. இரத்தினவேற்பிள்ளை, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலா [சாலை, மதுரை.

2. 12. நா. கனகராஜையர். ௸ ௸

B. இராஜராஜேஸ்வரஸேதுபதி.
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

விளம்பரம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளியாகும் "செந்தமிழில்" பிரசுரமாகவேண்டிக் கருதியனுப்புகிற வித்தியாவிஷயமானதும், சாஸ்திரவுணர்ச்சியுள்ளதுமான விஷயப்பிரவசனங்களையும், பத்திரிகைக்கனுப்புஞ் சமாசாரங்களையும், ஆராய்ந்தபிப்பிராயமெழுத அனுப்புகிற புஸ்தகங்களையும், நூதன புஸ்தக ஆராய்ச்சி விஷய சமாசாரங்களையும், "செந்தமிழ்"ப் பத்திரிகை விஷயமாய் ஏற்படக்கூடிய சகலவித லெட்டர்களையும், மணியார்டர் வகையறாக்களையும், ஷை தமிழ்ச்சங்கம் அச்சாபீஸில் செய்யவேண்டிய வேலைகளையும், தமிழ்ச்சங்கத்தோடு சேர்ந்திருக்கிற சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை விஷயமாகத் தெரிந்துகொள்ளவேண்டிய சகல தகவல்களையும் பற்றி எழுதிக்கொள்ளவேண்டியவர்கள் ஷை தமிழ்ச்சங்கம் மானேஜருக்கு எழுதவேண்டியது.

T. A. SUBBAVENKATARAMA AIYER,

Manager,

21—1—15.